# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 155 — 1975 මාර්තු 14 වැනි සිකුරාදා — 1975.03.14

155 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு மாச்சு மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. .. | 47 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | — | வடிவமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்கஉரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | 50 | பலவிதமானவை .. .. .. | — |


*கவனிக்க.—முத்திரை (திருத்தம்) சட்டமூலமும் இலங்கை மேலைத்தேய இசை, பேச்சு, நாடகக்கலை ஆசிரியர் கழகம் சட்டமூலமும் 1975 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

***வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்***

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது பதிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன், ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்கவேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

1. வியாபாரச்சின்னம் இல. : 33,532. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அண்ட் கம்பெனி, (தெலவரே இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலயின், இல்லி நொய்ஸ், ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் . (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அண்ட் குல த்ன, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 7. (6) வியாபாரச்சரக்கு : இருஷிகம், தோட்ட அபிவிருத்திப் பொறித் தொகுதிகளும் அப்பொறித் தொகுதிகளுக்கான உதிரிப் பாகங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**DEERE**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 33,525 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1974 ம் ஆண்டு பெப்ரவரி மீ 23 ம் உ.

3–288—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

1. வியாபாரச்சின்னம் இல. : 33,525. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அண்ட் கம்பெனி, (தெலவரே இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலயின் இல்லி நொயஸ், ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அண்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 7. (6) வியாபாரச்சரக்கு : இருஷிகம், தோட்ட அபிவிருத்திப் பொறித்தொகுதிகளும் அப் பொறித்தொகுதி களுக்கான உதிரிப் பாகங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**JOHN DEERE**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 32,430, 32,532 ஆகியவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1974 ம் ஆண்டு பெப்ரவரி மீ 22 ம் உ.

3–284—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,207. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் மார்ச் மாதம் 1 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டோஷ்சி கோல்ட் உண்ட் சில்பர் ஷியிடன்ஸ் ரோல்ற் வோர்மல்ஸ் றெசெல்லர், (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுவினது சட்டங்களின் அடிப்படையில் நிறுவப் பெற்றதோர் கூட்டுச்சபை) இல. 9, வெய்ஸ்ஃபிரேஉன்றஸ்ஸி, ஃபிருங்ஃபர்ட் (மெயின்) ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : வி. முருகேசு அவர்கள், ஹேமாஸ் கட்டடம், யோக் வீதி, கொழும்பு 1. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : றப்பர், தொகுத்த றப்பர், பிளாஸ்டிக் உற்பத்தி ஆக்கங்களில் உபயோகப்படுத்தப்படுகின்ற இரசாயன விளைவுப் பொருட்களான நிரப்பிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**SILTEG**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு மே மீ 9 ம் உ.

3–286—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

1. வியாபாரச்சின்னம் இல. : 34,991. (2) பெற்ற திகதி : 1973 ம் வருடம் பெப்ரவரி மாதம் 2 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கே. ஹட்டொறி அண்ட் கொ ; ஜப்பானியச் சட்டங்களின் அடிப்படையில் முறையாக நிறுவப்பெற்றதோர் கூட்டுத் தொகுதிக் கம்பெனி, இல. 5–11, 4–சோமிகின்சா, சுஒ கு, டோக்கியோ, ஜப்பான் ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அண்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம் கொழும்பு. (5) வகுப்பு : 10. (6) வியாபாரச்சரக்கு : கால அளவைக் கருவிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

SILVER ANGEL

இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு " Silver " என்ற சொல்லினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1974 ம் ஆண்டு பெரவரி மீ 28 ம் உ.

3–285—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,241. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் டிசெம்பர் மாதம் 18 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபாபன்ஃபப்றிக்கன் பேயர், ஏ. ஜீ., (ஒரு ஜெர்மன் கம்பெனி) லிவர்குசென்–பேயர்வர்க், மேற்கு ஜெர்மனி, உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் த சில்வா அண்டு மெண்டிஸ், த. பெ. இல. 884, கொழும்பு. (ட. வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : மானிட உபயோகத்திற்கான மருந்துப் பாகசாலையாக்கத் தயாரிப்புக்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ALGERIL**

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு நொவெம்பர் மீ 21 ம் உ.

3–289—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,931. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் டிசெம்பர் மாதம் 18 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : மொஹமத் ஹாசிம் சலாஹுதீன் அன்ட் அலியார் மரிக்கார் மொஹமத் சாலி, "ஹாசிம் இன்டஸ்ரீஸ்" என்பதாக வியாபாரஞ் செய்பவர், இல. 77/9, புதிய சோனகத் தெரு, கொழும்பு ; தையல் நூல் உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது :—. (5) வகுப்பு : 23. (6) வியாபாரச்சரக்கு : பருத்தியாலான முறுக்கிய நூலும் தையல் நூலும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு ஸ்ரீ லங்கா தேசப்படச் சித்ரத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 6 ந் உ.

3–224—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,042. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 30 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : ஜெரால்ட் விக்கிரமசூரிய அன்டு டல்சி விக்கிரமசூரிய (விக்கிரமசூரிய அன்டு கொ. என்பதாக வியாபாரஞ் செய்பவர்கள்) சில்ட்றன்ஸ் புக்ஷொப், இல. 20, இராணி வீதி, கொழும்பு 1; இசைத்தட்டுக்களின் மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : உபாலி டபிள்யு. ஜயசூரிய அவர்கள், இல. 109, ஹல்ஸ்டோவ் தெரு, கொழும்பு 12. (5) வகுப்பு : 9. (6) வியாபாரச்சரக்கு : இசைத்தட்டுகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு "தட்டின்" உருவத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 7 ந் உ.

3–223—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 34,852. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் நொவெம்பர் மாதம் 29 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : தோன் ஏ. ஈ. ஐ. றேடியோ வல்வ்ஸ் அன்ட் ரியுப்ஸ் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, மேல் சாந்த மாட்டின்ஸ் ஒழுங்கை, லண்டன், டபிள்யு. சி. 2 எச் 9 ஈடி, இங்கிலாந்து ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 8. (6) வியாபாரச்சரக்கு : மின்னியக்க முறையிலும், மின்னியக்கமற்ற முறையிலும் இயங்கும் நிழற்படம் எடுப்பதற்கு உபயோகிக்கப்படுகின்ற மின் விளக்குகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**EDISWAN**

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 27 ந் உ.

3–255—14.03.75 ம் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,586. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 31 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அன்ட் கம்பெனி, (டெலவரே இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலயின், இல்லிநொய்ஸ், ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம் கொழும்பு. (5) வகுப்பு : 7. (6) வியாபாரச்சரக்கு : கிருஷிகம், தோட்ட அபிவிருத்திப் பொறித்தொகுதிகளும் அப்பொறித் தொகுதிகளுக்கான உதிரிப் பாகங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :



இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 32,430 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு பெப் வரி மீ 22 ம் உ.

3–287—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,730. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஜூலை மாதம் 19 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அப்துல் றஹிமன் மொஹமத் யசின், "த நஷனல் இன்டஸ்றியல் வர்க்ஸ்" என்பதாக வியாபாரஞ் செய்பவர், லொற் ஏ", ஹப்புகப்புகவத்த முஸ்லிம் வீதி, டிக்வெல்ல, நிறப்பூச்சுக்கள், டிஸ்ரெம்பர் சாயங்களின் உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த. சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : நிறப்பூச்சுக்களும் "டிஸ்ரெம்பர்" சாயங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ACROLAC**


இதற்கு எதிராக எடுத்துக்காட்டிய வியாபார உரிமை அடையாள இல. 18,776 இன் சொந்தக்காரருக்கு இவ்வியாபார உரிமை அடையாளம் பொறித்த வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை அனுப்புவதென்ற ஒப்புதலின் பேரில் இவ்வியாபார உரிமை அடையாளம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு மார்ச் மீ 12 ந் உ.

3–254—14.03.75 ந் திகதிய வர்த்தமானியின் இல. 155

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,830. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் நொவெம்பர் மாதம் 17 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : கித்ஸ்ரீ நெத்தசிங்ஹ அன்டு றணசிங்ஹ ஆரச்சிகே ஜயந்தா பிறேமலால் ஹெதொட, ஃபோட்டோ ஹெமிக்கல் இன்டஸ்றீஸ் என்பதாக வியாபாரஞ் செய்பவர், இல. 593/1 2 மருதானே வீதி, கொழும்பு 10, உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : நிழற்பட படமெடுக்கும் கடதாசிகளுக்கும், நிழற்படச் சுருள்களுக்குமான இரசாயனச் சேர்க்கைகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ் வியாபார உரிமை அடையாளப் பதிவு சின்னத்தில் காணப்படும் விவரண விடயத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எஸ். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு மே மீ 8 ம் உ.
3–290—14.03.75 த் திகதிய வர்த்தமானி இல. 155

---

## ஆக்க உரிமைக் சட்டளேச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்

### அறிவித்தல்

பின்வரும் விபரக்கூற்று எற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இல. 6291—12, சனவரி, 1969 (ஐக்கிய இராச்சிய 3029 ம் இலக்க 19, சனவரி, 1963 ஆம் திகதிக்கு முன்னுரிமை கோரும் வழக்கமனு).

அலக்கலோறி அன் கம்பனி இலிமிட்டெட்டு.

" பச்சை இலைத்தேயிலையைப் பதப்படுத்தல் "

சுருக்கம் : இலைத்தேயிலையைப் பதப்படுத்துவதற்குரிய திருத்தப்பட்ட ஒரு வழிமுறையில், பவன ஓட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கும்போது இலைகளைத் துகளாக்கி, ஊராய்வு மூலம் கலவெடிப்புக்களை உண்டாக்குதல்.

9 கோரிக்கைகளும் 1 வரை படமும் உள்ளது.

எஸ். எல். த சில்வா
ஆக்கவுரிமைப்பதிவாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 30 ந் உ.

3-219 A—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

---

### அறிவித்தல்

பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இல. 6293–20, சனவரி, 1969 (யப்பான் நாட்டு 3136 ஆம் இலக்க 20 சனவரி, 1968 ஆம் திகதிக்கு முன்னுரிமை கோரும் வழக்கமனு).

டோயோ பொறியியல் கூட்டுத்தாபனம்.

" அமோனியா அல்லது மீதனல் கூட்டுமுறையிலுள்ள செயலிழந்த பகுதிப்பொருட்களை நீக்குதல்."

சுருக்கம் :

கண்டுபிடிப்பின் தன்மை பின்வரும் உரிமைகோரல் 1, 2 இலிருந்து நிச்சயிக்கப்படலாம்.

1. அமோனியாக் கூட்டுத்தொகுதியில் செயலிழந்த பகுதிப்பொருட்களை நீக்குவதற்கான ஒரு வழிமுறையில், அமோனியா உண்டாக்குவதற்குரிய தாக்கத்தைக் கொடுக்காத பகுதிப்பொருட்கள் கூறப்பட்ட கூட்டுத் தொகுதியிலுள்ள ஒரு கழுவப்படும் வட்டத்தில், கழுவும் திரவமாக, திரவமாக்கப்பட்ட அமோனியாவுடன் கழுவப்படுகின்றது. இதனால், கூறப்பட்ட வழிமுறை ஓட்டத்தில் செயலிழந்த பகுதிப்பொருட்கள் கழுவும் திரவத்தினுள் கரையலாம். பெறப்படும் கரைசல், கூறப்பட்ட கூட்டுத்தொகுதிக்கு வெளியே அமைக்கப்பட்ட பிரிவுபடுத்தும் வட்டத்திற்குச் செலுத்தப்பட்டு, இங்கு அச்செயலிழந்த பகுதிப்பொருட்கள் பிரிக்கப்பட்டு, நீக்கப்படுகின்றன. புதுப்பிக்கப்பட்ட கழுவுதிரவம், செயலிழந்த பகுதிப்பொருட்கள் பிரிக்கப்பட்டபின், கூறப்பட்ட கழுவும் வட்டத்திற்கு மறு உபயோகத்திற்காக மீட்டனுப்பப்படுகின்றது.

2. மீதனல் கூட்டுத்தொகுதியில் செயலிழந்த பகுதிப்பொருட்களை நீக்குவதற்கான ஒரு வழிமுறையில், மீதனல் உண்டாக்குவதற்குரிய தாக்கத்தைக் கொடுக்காத பகுதிப்பொருட்கள் கூறப்பட்ட கூட்டுத் தொகுதியிலுள்ள ஒரு கழுவப்படும் வட்டத்தில் கழுவும் திரவமாக, திரவமாக்கப்பட்ட மீதனலுடன் கழுவப்படுகின்றது. இதனால் செயலிழந்த பகுதிப்பொருட்கள் கழுவும் திரவத்தினுள் கரையலாம். இதனால் பெறப்படும் கரைசல், கூறப்பட்ட கூட்டுத்தொகுதிக்கு வெளியே அமைக்கப்பட்ட பிரிவுபடுத்தும் வட்டத்திற்குச் செலுத்தப்பட்டு, இங்கு அச்செயலிழந்த பகுதிப்பொருட்கள் பிரிக்கப்பட்டு, நீக்கப்படுகின்றன. புதுப்பிக்கப்பட்டகழுவும் திரவம், செயலிழந்த பகுதிப்பொருட்கள் பிரிக்கப்பட்டு, நீக்கப்பட்டபின், கூறப்பட்ட கழுவும் வட்டத்திற்கு மறுஉபயோகத்திற்காக மீட்டனுப்பப்படுகின்றது.

7 உரிமை கோரல்களும் 7 வரைபடங்களும் உள.

ஆர். எல். த சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 10 ந் உ.

3–219B—14.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 155

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும் அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மார்ச்சு .. | .. வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல்.. | .. வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | .. வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 18.4.75 |
| மே | .. வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | .. வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 23.5.75 |
| யூன் .. | .. வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 20.6.75 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.